D E P O S I T I O N  OF W I T N E S S

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

PALLAVARAM.

STC.No.214/2023

OLD.No.605/2022

P.W.1

| | |
|---|---|
| Name | : Loganathan |
| Father/Husband Name | : K.E.Sambandham |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act 1873 of the day of 17.02.2025

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

புகார்தாரர் சா.ஆ 3ல் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் ஆம். நான் தோல் சம்பந்தமான தொழில் செய்து வருவதற்கு வருமான வரி செலுத்த மற்ற ஆவணங்கள் உள்ளதா என்றால் நான் சிறிய தொழிலாக Brokerage செய்து வருகிறேன். எனக்கு மாத வருமானம் ரூ.20 முதல் ரூ.30 வரும். எனக்கு வருமானம் வரும் வகையில் சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு இரண்டு மகள்கள் உள்ளார்கள். பெரிய மகளுக்கு திருமணம் ஆகிவிட்டது. எனது இருமகள்களும் பட்டப்படிப்பு படித்தள்ளார்கள்.

மேற்படி தொழிலை தவிர வேறு ஏதேனும் நிலையான வேலை உள்ளதா என்றால் இல்லை. எனது வழக்கறிஞர் அறிவிப்பில் பல்வேறு தினங்களில் எதிரிக்கு கடன் கொடுத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கின் பிராது மற்றும்

பிராமண வாக்குமூலத்தில் ஜுன் 2016ல் எதிரிக்கு ரூ.15,50,000/- கொடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் இவற்றில் எது உண்மை என்றால் நான் மொத்த தொகையை குறிப்பிட்டுள்ளேன். வழக்கின் காசோலையை எப்போது கொடுக்கப்பட்டுள்ளது என்றால காசோலையில குறிப்பிட்டுள்ள தேதியிலிருந்து 10 நாட்கள் முன்பு கொடுத்துள்ளார்.

எதிரியின் தம்பி மோகன் என்பவருக்கும் கடன் கொடுத்ததாக சட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆம். எவ்வளவு கடன் கொடுத்துள்ளேன் என்றால் ரூ.7,00,000/- லட்சம் கொடுத்துள்ளேன். மேற்படி தொகையை மோகன் திருப்பி செலுத்தி விட்டாரா என்றால் இல்லை. ஜுலை 2016 ல் மோகன் என்பவருக்கு கடன் கொடுத்தேன். அவருக்கு எதிரான வழக்கு நிலுவையில் உள்ளது. மோகன் என்பவர் எனது வங்கி கணக்கில் ரூ. 1,00,000/- த்தை ஜுலை 2018ல் மோகன் செலுத்தியுள்ளாரா என்றால் ஆம். மோகன் என்பவருக்கு எவ்வளவு சதவீத வட்டிக்கு பணம் கொடுத்தேன் அவர் எவ்வளவு வட்டி கொடுத்தார் என்றால் வட்டி எதுவும் அவர் செலுத்தவில்லை.

மோகனுக்கு கொடுத்த கடன் தொகைக்கு மோகனிடம் மற்றும் எதிரியிடமிருந்து நிரப்பப்படாத காசோலை மற்றும் நிரப்பப்படாத பத்திரம் மற்றும் புரோ நோட்டுக்கள் வாங்கிக்கொண்டு எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையை 20.10.2021 மற்றும் 15.11.2021 தேதிகளில் வங்கியில் செலுத்தினேன் என்றால் ஆம். வழக்கு காசோலையை வங்கியில் செலுத்தப்பட்டு திருப்பப்பட்ட பிறகு எதிரிக்கு எழுத்துபூர்வமான சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் ஆம். பு.சாஆ10 சட்ட அறிவிப்பின்

20.10.2021 மற்றும் 15.11.2021 தேதிகளில் காசோலை செலுத்தப்பட்ட விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

20.10.2021 தேதியில் வழக்கு வங்கியில் செலுத்தப்பட்டு திருப்பப்பட்ட ரசீயினை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் உள்ளது தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். வழக்கு காசோலையை எதிரி சென்னையில் வைத்து கொடுத்தார். மேற்படி விவரத்தினை புகார் மனுவியிலும், சட்ட அறிவிப்பிலும் குறிப்பிடப்படவில்லை என்றால் ஆம்.

**<u>எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.